Registered No. M 5068.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஆவணிமீ 8௳ 23—8—1948 ஹிஜிரி 1367 ஷவால்மீ 17௳ திங்கட்கிழமை. } இதழ் 30

இன்றைய சிக்கலான அரசியல் அறிவுக்கு
'ஆஸாத்' என் அவசியம் ?

☆

பாகிஸ்தானின் உண்மையான சொரூபத்தை தீட்டிக்காட்டுவது 'ஆஸாத்'
வெள்ளை ஏஜெண்டுகளான லீக் லீடர்களை உங்களுக்கு
அறிமுகப்படுத்துவது 'ஆஸாத்'
அவர்களுடைய வேற்றுமைப் பிரசாரத்தின் உதிரக்கடலில் மறைந்துவிட்ட
ஒற்றுமை முத்துக்களைக் கண்டெடுப்பது 'ஆஸாத்'
பாகிஸ்தானுக்கு ஓடி பரதவிப்போரின் துன்பங்களை சித்தரித்துக் காட்டி
இந்தியாவில் இன்பமுடன் வாழச்செய்வது 'ஆஸாத்'
அமைதி, சமாதானம், சகோதரத்துவம், முன்னேற்றத்திற்கு அவசியமான
அறிவை ஊட்டுவது 'ஆஸாத்'
முஸ்லிம்களை தவருன வழியிலிருந்து தடுத்து இஸ்லாமுக்கு உகந்த வகையில்
காங்கிரஸோடு இணைப்பது 'ஆஸாத்'
வெள்ளையர்களின் பொய்யான சரித்திரக் கூற்றுகளை அம்பலப்படுத்தி
இந்தியாவின் உண்மையான உன்னத சரித்திரத்தை விளக்குவது 'ஆஸாத்'
லீக் நடவடிக்கைகளால் ஏற்பட்டுவிட்ட வெறுப்பைப் போக்கி
நல்லுணர்ச்சியை ஏற்படுத்துவது 'ஆஸாத்'
நடந்தேறிய கலகங்களுக்கெல்லாம் ஒருசில லீக் லீடர்களே காரணமென்பதை
எடுத்துக்காட்டி நிரபராதிகளான முஸ்லிம்களை நிரபராதிகள் என்று
நிரூபித்துக் காட்டுவது 'ஆஸாத்'
சுதந்திர இந்தியாவில் சுபிட்ச இந்தியாவை உருவாக்கி
இந்தியர்களைத் தட்டி எழுப்புவது 'ஆஸாத்'
குறை எங்கிருப்பினும் தயவு தாட்சண்யமின்றி கண்டிப்பது 'ஆஸாத்'
விவசாயிகள், தொழிலாளிகள், பாட்டாளிகள் ஆட்சியை
லட்சியமாகக் கொண்டிருப்பது 'ஆஸாத்'
வகுப்புவாத இருட்டறையில் சமதர்ம தீபத்தை ஏற்றிவைப்பது 'ஆஸாத்'
தேசீய, சர்வதேசீய அரசியலை அலசி அரசியல் அறிவை துலக்குவது 'ஆஸாத்'

— வருக ஆகஸ்டு பதினைந்து. —

—: "O. N. மஹமூது" :—

சுதந்திரம் கிடைத்த நாள் சுமுகமாக வருக! அடிமைத்தளையை அறுத்தெறிந்த நாள் அன்புடன் வருக!! மறுமலர்ச்சி யடைய காரணமாய் இருந்த நாள் மகிழ்ச்சியுடன் வருக! சோகம் நிறைந்த இந்திய வானிலே மகிழ்வுடன் சுதந்திர சூரியனை உதயமாக்கிய நன்னளே......வெள்ளையனை வெளியில் துரத்திய வளப்பமான "திரு" நாளே நீ! வருக! வருக!! என வண்ணத் தமிழிலே கூறுகிறேன். வாயார! நெஞ்சார!! உன்னைக் களிப்புடன் வரவேற்கிறோம். உவகையுடன் வரவேற்கிறோம். எக்காளத்துடன் வரவேற்கிறோம்!!!

நீ வந்த ஒரு வருஷத்தில் மகிழ்ச்சியான வேலைகளும் செய்தாய் மனம் ஒவ்வாத வேலைகளும் செய்தாய். நீ வந்த ஒரு ஆண்டில் ஆச்சரியப்படும் படியான வேலைகளும் செய்தாய் பயங்கரமான வேலைகளும் செய்தாய்—பரமானந்தம் கொள்ளும்படியும் வேலைகள் செய்தாய். அதை நினைத்தால்.........

கவலையும்......களிப்பும்......! பயங்கரமும்—பரமானந்தமும், மாறி - மாறி வந்து சென்ற கால நிகழ்ச்சிகளை சித்தரித்துக்காட்டுகிறது.

இதோ! நீ செய்திருக்கும் வேலைகள். அதைப் பார்த்து நீயே சிந்தி!

நாம் இவ்வளவு வேலைகள் செய்திருக்கிறோமா! என நீ எங்கினாலும் சரி, எக்காளமிட்டாலும் சரி! எள்ளி நகையாடினாலும் சரி, நீ தந்த கவலையையும் களிப்பையும் கண நேரத்தில் நீயே அறிந்துகொள்ளலாம். படி! உண்மை விளங்கும்.

கவலை !

அன்று அடிமைத் தளையை அறுத்தெரிந்தாய்! ஆனால்.......அறுந்த வேகத்தில் ஒரு அங்கமும் (பாகிஸ்தான்) அறுந்துவிட்டது.

அந்த அங்கத்தில் ஜாரின் ஆட்சி ஜரூராக நடப்பதைக் கண்டு சஞ்சலமடைகிறோம். பாஸிஸ்ட் ஆட்சி பயங்கர ரூபத்தில் நடப்பதைக்கண்டு பதை பதைக்கிறோம்.

அது மட்டுமா ?

உலகம் போற்றும் உத்தமரை மறுமலர்ச்சி தந்த மன்னரை, எழுச்சியூட்டிய ஏந்தலை, புரட்சி மூட்டிய புண்ணியரை, அஹிம்சை என்னும் ஆயுதத்தை அன்புடன் பூண்டு அணுகுண்டுக்கு அஞ்சேன் அன்னியனே! வெளியேறு என ஆர்ப்பரித்த ஆபத்பாந்தவரை சகோதரர்களிடம் சண்டைவேண்டாம் சலனமற்றிருங்கள் என சமாதானம் சொன்ன, இன்னலை இன்பமுடன் தீர்த்த தீரரை இறைவனிடம் சேர்த்து விட்டாய் அந்தோ!

அது மட்டுமா ?

வட நாட்டில் வகுப்பு வெறி தனது கோர பற்களைக் காட்டி களி நடம் புரிந்ததைக்கண்டு நீ களிகொண்டாய்! அகதிகளின் தலைவிரி கோலங்களைக் கண்டு நீ கோலாகலமடைந்தாய்! அவர்களின் கண்ணீரைக் கண்டு களிப்படைந்தாய்! காஷ்மீரிலே களங்கத்தை ஏற்படுத்தினாய்! நிஜாமின் நீசஆட்சியை இன்னும் நிலைத்திருக்க வைத்திருக்கின்றாய் வீரன் உஸ்மானை உலகிலிருந்து விடை பெற்றுக்கொள்ளச் செய்தாய்!

இன்னும் கேள் !

அன்று! உன்னை அன்புடன் வரவேற்றோம். ஆனால்.........இன்று! இன்னல் நிறைந்திருக்கிறது எங்கள் இதயம். ஏனெனில் பட்டினி அரக்கன் நமது நாட்டைப் பண்புடன் பற்றி இருக்கின்றான். உண்ண உணவின்றி—உடுத்த உடையின்றி—இருக்க இடமின்றித் தவிக்கும் ஏராளமான ஏழைகளைக் கண்டு இதயம் நொருங்குகிறது நெஞ்சம் பதைக்கிறது, உள்ளம் உடைகிறது இந்தியாவுக்கு சுதந்திர சூரியனை நீ உதயமாக்கியதுதான் தாமதம்!

- **பாகிஸ்தானின் பயங்கர ஆட்சி**
- **அகதிகளின் அலங்கோலம்**
- **மகாத்மாவின் மறைவு**
- **காஷ்மீரில் களங்கம்**
- **நிஜாமின் நீசத்தனம்**
- **கபார்கான் கைது**
- **உஸ்மானின் மறைவு**

அத்தனையும் நமது நாட்டிலே அடுக்கடுக்காய் நடந்து, வருங்கால இந்திய சரித்திரத்திலே பொறிக்கப்படும் நிலையை நீ செய்துவிட்டாய்! இப்பொழுது நீ புரிந்து கொண்டாயா? நீ கொடுத்த கவலையை.

இனி நீ கொடுத்த களிப்பையும் கேள், அது சலனமுள்ள உள்ளத்துக்குக் கொஞ்சம் சந்தோஷமும் கொடுக்கிறது.

களிப்பு !

அடிமை வாழ்விலே உழன்று கொண்டிருந்த இந்தியர்களை சுதந்திர புருஷர்களாக்கினாய்! கடைசி ஆங்கில கவர்னர் ஜெனரலை கனவேகத்தில் கப்பலேற்றினாய் - தலை வணங்கா தமிழரை - அறிஞரை, தாழ்ச்சியுற்ற தமிழகத்தை தலை நிமிரச்செய்தவரை, வைஸிராயின் ஆட்சி பீடத்தில் அமர்த்தினாய்!

அது மட்டுமா ?

சமஸ்தானாதிபதிகளை இந்தியாவுடன் இரண்டறக்கலக்க - அவர்களை புத்துலக சிற்பிகளாக பொலிவுற புகலிடமளித்தாய்! கண்ணை மூடிக்கொண்டு கரடு - முரடு நிரம்பிய பாதையில் சென்று கொண்டிருந்த வீரர்களின் கரங்களைப் பிடித்து வழி காட்டினாய். அதைக்கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். மறுபடியும் நீ புனர்ஜென்மம் எடுக்கப் போகிறாய். இதில் நீ செய்யவேண்டியதையும் குறிப்பிடுகிறோம். அதை தவறாமல் அடுத்த வருஷத்தில் நீ செய்வாய் என நம்புகிறோம்.

நீ செய்யவேண்டியது !

பட்டினி அரக்கனை பரபரப்புடன் ஓடச் செய்ய வேண்டும். ஏழைகளின் கண்களை கன வேகத்தில் துடைக்கவேண்டும். ஜனசமூகம் நல்வழிக்குக் கொண்டு வரவேண்டும். காஷ்மீர் பிரச்னையை உடனே தீர்க்க வேண்டும். வேலை நிறுத்தங்களை வேண்டாம் என செய்யவேண்டும். வகுப்புவாத வெறியை வேரறுக்க வேண்டும். நெரிஞ்சி முட்கள் நிரம்பிக் கிடந்தும் - காரிருள் கவிழ்ந்திருந்தும் பாராமல் கண்ணை மூடிக் கொண்டு செல்லும் சில வீரர்களை நேரான பாதையில் சீராக செலுத்த வேண்டும். அவர்களின் ஒளியற்ற கண்களில் ஒளி உண்டாக்கி அவர்களின் சென்றகால செய்கைகளை சித்தரித்துக் காட்டி சிறப்புற்ற வழிக்குக் கொண்டுவரவேண்டும். மேலும், மேலும் மாபெரும் தலைவர்களுக்கு மாசு, மருவற்ற வாழ்க்கையைத் தர வேண்டும். மேற்கண்ட அத்தனையையும் அடுத்த வருஷத்தில் சுதந்திரஇந்தியா, சுபிட்சமும், சந்தோஷமும், வாழ்வும், வளப்பமும், உயர்வும், உன்னதமும் அடைய நீ கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் உன்னை அன்புடன், அகமகிழ்ச்சியுடன், இன்பமுடன் அடுத்த வருஷத்தில் வரவேற்போம். அப்படியே எதிர்பார்த்தபடி இறைவனருளால் நீ கொண்டு வருவாயாக! நினைத்தபடி நிகழுமாக!

வாழ்க சுதந்திர தினம் !

மேலப்பாளையம்

மாகாண காங்கிரஸ் கமிட்டியின் அனுமதியின் பேரில் திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தீர்மானப்படி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உதவி காரியதரிசி ஸ்ரீ P. சங்கர குற்றாலம் அவர்கள் தலைமையில் 1948-ம் வருஷம் ஆகஸ்டு-மீ 11உ காலை 9-30 மணிக்கு மேலப்பாளையம் தம்தாஸ் அவர்கள் பங்களாவில் மேலப்பாளையம் நகர காங்கிரஸ் கமிட்டி தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலில் கீழ்க் கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டும், கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

1. V. S. T. முகம்மது இபுராகிம் — தலைவர்
2. V- கலியாணசுந்திரம்பிள்ளை — உபதலைவர்
3. M K. காதர் முகையதீன் — காரியதரிசி
4. P. P, முகம்மதுஇபுராகிம்—உபகாரியதரிசி
5. சு. சுப்பையா செட்டியார்—பொக்கிஷதார்

இதர மெம்பர்கள்·

6. நா. மு. முகம்மது ஐதருஸ்
7. பு. மு சாகுல் ஹமீது
3. ம. மு. ஐதருஸ்
9. சொ. சாமிநாத பிள்ளை
10. V. A. முகம்மது இஸ்மாயில்
11. ஒ. அ சகரியா
12. L. பிச்சாண்டி அய்யர்
13. மூக்கத்தேவர்
14. பூலி மீரா முகையதீன்
15. த. செ. உதுமான் மைதீன்

முதலியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. காந்திஜி அகாலமரணத்திற்காக வருந்துவதோடு, ஆத்மா சாந்தியடையவும், வகுப்பு ஒற்றுமைக்குப் பாடுபடுவதாகவும் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளப்பட்டது.

2. இந்திய யூனியன் நேருஜி சர்க்காருக்குப் பரிபூரண ஆதரவு கொடுத்து ஒத்துழைப்பதுடன், இந்திய கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்ட ராஜாஜி அவர்களுக்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

3. இந்திய யூனியனுடன் ஹைதராபாத் சேர்ந்து பொறுப்பாட்சி வழங்கும்படி ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பிறகு வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

M. K. காதர்முகையதீன்,
காரியதரிசி, மேலப்பாளையம்.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 23—8—'48 திங்கட்கிழமை { இதழ் 30

பழைய சாம்ராஜ்ய போக்கு

"சமீப மாறுதலின் அர்த்தத்தை உணராத சிலர் இந்தியாவிலும் இருக்கின்றனர். பழைய ஏகாதிபத்தியம் மீண்டும் வந்துவிடுமோவென்று அவர்கள் அஞ்சுகின்றனர்" என்று லண்டனில் நடந்த இந்திய சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது இந்தியர்களின் கூட்டத்தில் பிரிட்டிஷ் நிதி மந்திரி ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் கூறினார். மேலும் அவர் இரண்டு நாடுகளுக்குமிடையே சரிசம அந்தஸ்து அடிப்படையில் புதிய உறவு ஏற்பட்டுவிட்டதென்றும் ஏகாதிபத்தியம் இந்தியாவுக்குத் திரும்பிப் போவதென்பது கிடையாதென்றும் பிரிட்டிஷ் பிற்போக்காளர்களுக்கும் வலியுறுத்தினார். இந்தியர்களின் சந்தேகத்தைப் போக்க பிரிட்டிஷ் சர்க்காரின் பிரபலஸ்தரென்ற முறையில் ஸர் கிரிப்ஸ் முயற்சித்ததை வரவேற்கிறோம். பிரிட்டிஷ் சர்க்காரிலுள்ள இதரர்களும் பிரிட்டிஷ் பொதுமக்களும் ஸர்கிரிப்ஸின் அபிப்பிராயத்தையே பிரதிபலித்தால் இரண்டு நாடுகளின் எதிர்கால நல்லுறவுக்கு அதைவிட பலனளிக்கத்தக்க சிறந்த சாதனம் வேறெதுவுமிருக்க முடியாது. ஆனால் நடக்கும் காரியங்களோ அதற்கு நேர்மாறானவை. அதனால், இந்தியப் பிரச்னைகளில் சிக்கலுண்டாக்குவதற்காக பிரிட்டன் தன்னுடைய பழைய கைவரிசைகளை இதுவரை கைவிடவில்லை என்ற எண்ணம் இந்தியாவிலுள்ள சிலருக்கு மட்டுமின்றி பெரும்பான்மை மக்களுக்கும் இருக்கத்தான் செய்கிறது. இந்தியாவையும், பாகிஸ்தானையும் மீண்டும் அடிமைப்படுத்த பிரிட்டன் விரும்பவில்லை என்பதை ஏற்பதில் நமக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை. ஆயினும் இரண்டு டொமினியன்களையும் சிண்டு முடிந்து விடுவதன் மூலம் இரண்டு நாடுகளுமே அரசியல் துறையில் எப்பொழுதும் தன்னுடைய தயவையே நாடியிருக்கும்படிச் செய்வதே பிரிட்டனின் நோக்கம். இந்தியா பாகிஸ்தான் உள்நாட்டுப் பிரச்னைகளில் தலையிட்டு சிக்கல்களை உண்டாக்கி வருவதே அதற்குப் போதிய ஆதாரமாகும். பாகிஸ்தானில் ஆங்கில அதிகாரிகளின் நடவடிக்கைகளை பிரிட்டிஷ் சர்க்கார் ஒருக்காலும் தட்டிக்கழித்துவிட முடியாது. இந்தியப்பிரிவினையின்போது கலவரப் பிரதேசங்களின் நிர்வாகப் பொறுப்பு ஆங்கில அதிகாரிகளிடமே இருந்தது. அவர்கள் அந்தரங்க சுத்தியுடன் கடமையைச் செய்திருந்தால் ஒரு இடத்திலும் கொலை பாதகச் செயல்கள் நடந்திருக்க முடியாது. பிரிவினைக்குப் பிறகும் ஆங்கில அதிகாரிகள் உதவி செய்யாமல் இருந்திருந்தால் பாகிஸ்தான் ஒருக்காலும் காஷ்மீரை தாக்கியிருக்க முடியாது. அன்று எல்லைப்புரம், மேற்கு பஞ்சாப் மாகாணங்களில் கவர்னர்களாக இருந்தவர்கள் ஆங்கிலேயர்கள்தான். பாகிஸ்தானின் பிரதம சேனாதிபதியும் ஆங்கிலேயனாக இருந்தான் இன்றைக்குமிருக்கிறான் பாகிஸ்தான் ஜில்லாக்களின் டெபுடி கமிஷனர்களில் பெரும்பாலோர் ஆங்கிலேயர்களாக இருப்பதுடன் போலீஸிலும் பெருமளவுக்கு ஆங்கிலேயர்கள் இருந்து வருகின்றனர். தங்கள் உதவியின்றி அல்லது தங்களுக்குத் தெரியாமல் பாகிஸ்தானில் சிறுபான்மையினர் கொல்லப்பட்டனரென்று பாகிஸ்தானிலுள்ள ஆங்கில அதிகாரிகள் சொல்ல முடியுமா? அவர்களுடைய உதவியின்றி அல்லது அவர்களுக்குத் தெரியாமல் பாகிஸ்தான் காஷ்மீரை தாக்கியிருக்கத்தான் முடியுமா? வெளிப்படையாக பிரிட்டன் நடு நிலைமையை மேற்கொண்டிருந்தது. இந்நிலையில் பாகிஸ்தான் நாசகரமான திட்டங்களைப்போட்டு அவைகளை நடைமுறையில் கொண்டுவர விரும்பியபோது உடனே ராஜிநாமா செய்து பாகிஸ்தானின் நாசகரமான திட்டங்களை அம்பலப்படுத்த வேண்டியது ஆங்கில அதிகாரிகளின் கடமையாக இருந்தது. அவர்கள் அப்படிச் செய்யவில்லை. பாகிஸ்தானிலுள்ள தன் பிரஜைகளின் தவறான போக்குக்கு பிரிட்டிஷ் சர்க்கார் சமாதானம் சொல்ல முடியாதென்பது நிச்சயம். அத்துடன் காஷ்மீர் பிரச்னையில் பிரிட்டன் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டிருக்கிறது. காஷ்மீர் இந்திய யூனியனில் சேரும்போது அங்கிருந்த நிலைமை பிரிட்டனுக்கு நன்றாகத்தெரியும். இருந்தும் பந்தோபஸ்து சபையில் இந்தியாவுக்கு பாதகத்தையும் பாகிஸ்தானுக்கு சாதகத்தையும் விளைவிக்கக்கூடிய போக்கையே பிரிட்டன் மேற்கொண்டிருந்தது. பிரிட்டனின் ராஜதந்திரத்தை இந்திய மாகாஜனங்கள் சந்தேகிக்காமலிருக்க வேண்டுமென்றே ஸர் கிரிப்ஸும் அவரது சகாக்களும் விரும்புகின்றனர் நிச்சயமாக நாமும் சந்தேகிக்க விரும்பவில்லை. ஆயினும் சம்பவங்களின் தன்மை

"பாதுஷாகான்"

கான் அப்துல் கப்பார்கான் மரியாதை கலந்த அன்புடன் 'பாதுஷாகான்' என்று அழைக்கப்படுகிறார். ஆஜானுபாகுவான பட்டாணிய வீரர். வயது ஐம்பத்தொன்பது. பெஷாவருக்கு மேற்கே இருபதாவது மைலிலிருக்கும் 'உத்மான்ஜய்' யிலிருப்பவர். அவரது கோதுமை நிறமுள்ள நீண்ட முகம், நெருப்பைப்போல் சிவந்த கண்கள் வாழ்க்கை விளையாட்டல்ல கடமையைச் செய்வதற்கான ஒரு போராட்டம் என்று அவர் உணர்ந்திருப்பதையே காட்டுகின்றன.

தேசிய சேவை.

வீட்டிலேயே ஆரம்பக்கல்வி கற்றார். பிறகு பெஷாவரிலுள்ள மிஷன் ஸ்கூலில் சேர்ந்தார். அங்கிருந்து அலிகார் சென்றார். அலிகாரிலிருக்கையில் 'அல் ஹிலால்' பத்திரிகையில் பிரசுரமான மௌலானா அபுல் கலாம் ஆஸாதுடைய கட்டுரைகளின் மந்திர சக்தியால் தேசிய சேவையில் ஈடுபட்டார். அதற்கு முன் அவர் ராணுவத்தில் சேர எண்ணியதும் உண்டு. ஆயினும் தன்னுடைய ஒரு நண்பருடன் ஒரு வெள்ளையன் கௌரவமற்ற முறையில் நடந்து கொண்டதைப் பார்த்து தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டார். 1919-ல் ரௌலட் சட்டத்துக்கு எதிராக கிளர்ச்சி நடந்தது. பாதுஷாகான் தலைமையில் பட்டாணியர்கள் அதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர். அதையொட்டி நடந்த பொதுக்கூட்டமொன்றில் பாதுஷான் கைது செய்யப்பட்டார். அவரது தந்தையான பைராம்கானும் அக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார். சுதந்திர கிளர்ச்சியை கைவிடும்படி போலீஸ் அதிகாரி ஒருவர் கேட்டுக் கொண்டதற்கு பாதுஷாகான் கீழ்வரும் பதிலளித்தார். "சுதந்திரக் கிளர்ச்சியைக் கைவிடுவது மனித ஒழுக்கத்தைக் கைவிடுவது போலாகும். அது என்னால் சாத்தியமில்லை."

இந்தியர்களின் கண்களை திறக்காமலிருக்குமா? பிரிட்டிஷ் ராஜதந்திரம் இந்தியாவுக்கு தீங்கு செய்யும் துறையில் சென்றுகொண்டிருக்கிறது. இந்தியாவின் நல்லுணர்ச்சியையும், ஒத்துழைப்பையும்பெறுவது லட்சியமாயின் ஸர் கிரிப்ஸும் அவரது சகாக்களும் நடு நிலைமையை நழுவவிடாமல் அந்தரங்க சுத்தியுடன் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டிய தவசியம். இல்லையேல் தன்னுடைய விருப்பத்துக்கு நேர்மாறாக பிரிட்டனுடனிருந்து வரும் எல்லா உறவுகளையும் அறுத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்பட்டுவிடலாமென்று எச்சரிக்கிறோம்.

வெறுப்பு, துவேஷம், தனி உணர்ச்சியே முஸ்லிம் லீகின் அடிப்படை, தங்கள் ஏஜண்டுகளான லீக் லீடர்களின் லட்சியம் கைகூட வெள்ளையர்களும் அதை வளர்த்தார்கள். வெறுப்பு, துவேஷம், தனி உணர்ச்சி முதலிய சாதனங்களைக்கொண்டே லீக் கிளர்ச்சியும் பரவிற்று வெறுப்பும், துவேஷமுமே பாகிஸ்தானை ஏற்படுத்தின. பாகிஸ்தான் அமைந்த பிறகாவது அந்த சாபக்கேட்டை பாகிஸ்தான் லீடர்கள் கைவிட்டிருக்க வேண்டும். மோசடி, பொய், பிரட்டு அடிப்படையிலேயே பாகிஸ்தான் ஏற்பட்டிருக்கிறதென்று சில தினங்களுக்கு முன் இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு கூறினார். சுதந்திர தினத்தன்று பாகிஸ்தான் லீடர்கள் செய்த பிரசங்கங்கள் பண்டித நேரு கூறியதை மெய்ப்பித்து விட்டன. பரஸ்பரம் இருந்துவரும் இன்னல்களை அகற்ற இந்தியாவும் பாகிஸ்தானும் ஒத்துழைக்க வேண்டும் என்று இந்திய கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் பேசினார். முஸ்லிம்களின்கூட்டங்களில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை வற்புறுத்தினர். ஆயினும் மிஸ்டர் ஜின்னா தன் வழக்கப்பிரகாரம் விஷம் கக்குவதை விட்டபாடில்லை. இந்திய டொமினியனை விரோதி நாடு என்று ருசுப்பிப்பதற்கு இந்தியா வகுப்பு கலவரங்களுக்கு திட்டமிட்டிருந்ததாகவும் இன்றைக்கும் பாகிஸ்தானை பொருளாதாரத் துறையில் ஒடுக்கவே இந்தியாவிரும்புவதாகவும் அபாண்டங்களை அள்ளிவீசியிருக்கிறார். நின்றுகொண்டு சிறுநீர் கழியும் குருவின் சிஷ்யர்கள் மாத்திரம் சும்மாயிருக்க முடியுமா? எனவே காஷ்மீர் தாக்குதல் நியாயமானதென்றும் எவ்விதத் தாக்குதலையும் எதிர்த்து நிற்க பாகிஸ்தான் தயாரென்றும் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் ஒடிக் கொண்டே சிறுநீர் கழித்திருக்கிறார். காஷ்மீரைத் தாக்கியது பாகிஸ்தானேயாகும். இருப்பினும் பாகிஸ்தான் லீடர்கள் இந்தியா மீது குற்றம் சுமத்தி பாகிஸ்தான் எதிரி என்று பிரசாரம் செய்கின்றனர். பாகிஸ்தான் பொது மக்களின் உள்ளங்களில் இந்தியாமீது வெறுப்பை ஏற்படுத்தி அவர்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதைத் தவிர இதற்கு வேறு நோக்கமிருக்க முடியாது. இந்தியா பாகிஸ்தானுக்கு உதவவே விரும்புகிறது. அதற்கு மாறாக பாகிஸ்தான் இந்தியாவை எதிரி என்று குற்றம் சாட்டுகின்றது. இந்தியத்தலைவர்களுக்கும்பாகிஸ்தான் லீடர்களுக்குமிடையே உள்ள அடிப்படை வித்தியாசம் அதுதான்.

கால்களில் கனமான இரும்புச் சங்கிலிகள் பூட்டப்பட்டன. அதனால் கால்கள் காயமுற்று ரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது. "சில தினங்களுக்குள் என் கால்கள் விலங்குகளுக்குப் பழகிவிடும். அதன் பிறகு எனக்கு அது சகஜமாய்விடும்." என்று அடிக்கடி பாதுஷாகான் சொல்லுவார்.

பாதுஷாகான் சிறையிலிருந்து வெளிவந்த சமயத்தில் கிலாபத் கமிட்டியும், காங்கிரஸும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் போராடிக் கொண்டிருந்தன. பாதுஷாகானும் அதில் கலந்துகொண்டார். 1921ல் சுதந்திர தேசிய உயர்தர பள்ளிக்கு அடிகோலினார். அதன் கிளைகளை மாகாணத்தின் இதர இடங்களிலும் அமைத்தார் சுதந்திர தேசிய பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படுவதைத் தடுக்க எல்லைப்புர கமிஷனர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளிக்காமல் போயின. அதையொட்டி பாதுஷாகான் கைது செய்யப்பட்டார். மூன்று வருஷங்கள் சிறையில் கழித்தார். தனிமையாலும் கடின காவல் தண்டனையாலும் நோயுற்று அவருடைய எடையில் 50 ராத்தல்கள் குறைந்துவிட்டன. கிராமாந்திர சுற்றுப் பிரயாணம் செய்வதில்லையென்று உறுதியளித்தால் விடுதலை செய்வதாக அவரிடம் அறிவிக்கப்பட்டது. அவ்வித நிபந்தனைக்கு பாதுஷாகான் இணங்கவில்லை. அவரது நிலைமையைக் கண்டு சிறையதிகாரிகள் இரங்கி அளிக்க முன்வந்த சலுகைகளையும் அவர் ஏற்கவில்லை. சிறைக்குள் ஒழுக்கப்பிரசாரம் துடங்கினார். அவரது பிரசாரத்தைக் கேட்டு ஒரு அதிகாரி ராஜிநாமா செய்துவிட்டதைப்பார்த்து பீதியடைந்த ஏகாதிபத்தியம் பாதுஷாகானை எல்லைப்புரத்திலிருந்து பஞ்சாபிலுள்ள ஒரு சிறைக்கு மாற்றிவிட்டது.

குதாயீ கித்மத்கார் (தெய்வ ஊழியர்கள்)

விடுதலைக்குப்பிறகு பாதுஷாகான் குதாயீகித்மத்கார் ஸ்தாபனத்தை அமைத்தார். அதன் அடிப்படைகளாவன :—

1. ஆண்டவனுக்கும், மக்களுக்கும், தேசத்துக்கும் விசுவாசமாய் நடந்து கொள்ளுதல்.
2. எச்சந்தர்ப்பத்திலும் அஹிம்சையை கடைபிடித்தல்
3. சேவைக்காக எவ்வித பிரதி பிரயோஜனத்தையும் ஏற்காதிருத்தல்.
4. நிர்ப்பயமாய் தியாகத்திற்கு தயாராய் இருத்தல்.
5. ஒழுக்கமுள்ள சீரிய வாழ்க்கையை மேற்கொள்ளல்.

மாகாணமெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து குதாயீகித்மத்கார் கிளை ஸ்தாபனங்கள் அமைத்து பட்டாணியர்களுக்கு பயிற்சி அளித்து கொலை கொள்ளை போன்ற ஒழுக்கக்கேடான விஷயங்களை வெறுக்கும்படி பாதுஷாகான் உபதேசித்தார்.

குதாயீகித்மத்கார்கள் சிகப்பு உடையணித்து செங்கொடியைத் தாங்கி நின்றனர். தேசியத் தியாகிகள் சிந்திய ரத்தத்துடன் தொடர்பு கொள்வதே அதன் நோக்கமாக இருந்தது. அஹிம்சையின் ஊழியர்களை மிருக பலத்தைக் கொண்டு ஒடுக்குவதற்கு திட்டமிட்ட ஆங்கில அதிகார வர்க்கம் குதாயீகித்மத்கார்களை செஞ்சட்டையினர் அல்லது போல்ஷவிக்கர்கள் என்று பெயரிட்டு ரஷ்ய ஆதரவாளர்களென்று குற்றம் சுமத்திற்று. நண்பர்கள் குதாயீகித்மத்கார்களை செஞ்சட்டையினரென்று அழைக்காமலிருக்கும்படி பாதுஷாகான் அடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள். தெய்வ ஊழியர்களைத்தவிர வேறு எவருமில்லை என்று அவர் அடிக்கடிச் சொல்லுவார்.

இச்சந்தர்ப்பத்தில் இவ்விஷயத்தைக் குறிப்பிட வேண்டியதவசியம் அதாவது எல்லைப்புரகாந்தியென்று தான் அழைக்கப்படுவதை பாதுஷாகான் வரவேற்கவில்லை. இந்தப் பெயரை அவருக்கு கொடுத்தவர்கள் எல்லைப்புரத்திலுள்ள பிரிட்டிஷ் ஏஜெண்டுகளேயாவர் பட்டாணியர்களின் மதவெறியை தூண்டிவிடுவதே அதன் நோக்கம் பட்டாணியர்கள் அந்த பெயரால் அவரை அழைத்ததே கிடையாது. "என்னை எல்லைப்புர காந்தி என்று அழைப்பது சரியல்ல. காந்திஜீ ஒருவர்தான். அவருடைய பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாகும். அவரைத்தவிர வேறு எவரும் காந்தி அல்ல" என்று பல கூட்டங்களில் பாதுஷகான் சொல்லியுமிருக்கிறார்.

1930-ல் ரவி ஆற்றங்கரையில் பண்டிதநேருவின் தலைமையின் கீழ் பூரண சுதந்திர லட்சியத்தை காங்கிரஸ் பிரகடனம் செய்தது பாதுஷாகான் தலைமையில் குதாயீகித்மத்கார்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டனர். சுதந்திர தீபத்தில் பட்டாணியர்கள் விட்டில் பூச்சிகளைப்போல் விழுந்து மடிந்ததற்கு கிஸ்ஸாகானி பாஜார் சம்பவம் ஒன்றே போதும். இன்று இந்தியா விடுதலையடைந்துவிட்டது. சுதந்திர இந்தியக் காற்றிலே மூவர்ணக் கொடி கம்பீரமாய் பறந்துகொண்டிருக்கின்றது. அதில் தென்படும் சிகப்பு வர்ணமும் காங்கிரசின் முகத்தில் காணப்படும் வெற்றியின் செஞ்சாயலும் பட்டாணிய வீரர்கள் சிந்திய ரத்தத்தினால் ஏற்பட்டதென்பது உண்மை. ஒரு சில குறுகிய மனப்பான்மை கொண்ட வகுப்புவாதிகள் வேண்டுமானால் அதை மறுக்கலாம்.

—(பாக்கி அடுத்த இதழில்)

பாகிஸ்தான் செய்தி உலகம்.

பாகிஸ்தான் ரேடியோ அறிவிப்பதாவது.

ஆகஸ்டு 13.

எல்லைப்புர மாகாணத்தில் செஞ்சட்டைப்படையினர் பஹிரங்கமாக கலகத்தில் இறங்கிவிட்டனர் கையூம்கான் மந்திரிசபைக்கு எதிர்க எதிர்கோஷங்களை எழுப்பினர் போலீஸ்காரர்கள் பதினாறு செஞ்சட்டையினரை கொன்று குவித்தனர். கையூம்கான் அரசாங்கம் எல்லைப்புர முழுவதிலும் கூட்டம், ஊர்வலங்களுக்கு தடை விதித்திருக்கிறது. நேற்றைய தினம் செஞ்சட்டை படையினர் மீறி கிளர்ச்சி செய்தனர். 50 -செஞ்சட்டையினர் காயமடைந்தனர். 16 - செஞ்சட்டையினர் உயிரிழந்தனர் மாகாண முழுவதிலும் கிளர்ச்சி பரவி வருகிறது.

பாகிஸ்தான் ' லாஹூர்.

O O O

பாகிஸ்தான் உலமாக்களுக்கு சிறை.

மௌலானா மஹ்தும் ஷாஹ் பன்னேரியைச் சென்ற மூன்று வாரங்களுக்கு முன் போலீஸார் கைதுசெய்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்' எவ்வளவோ முயன்றும் அவர் எந்த சிறையிலிருக்கிறார்? அவருடைய குற்றம் யாது? என்று இது வரையில் தெரியவில்லை. லாஹூர் கோட்டையில் வைத்திருப்பதாக வதந்திகள் உலாவுகின்றன. இவ்விதம் துன்புறுத்தப்பட அவர் செய்த குற்றம் என்ன என்பது புலப்படவில்லை இதுவரையில் இம்மாதிரியான போலீஸ் நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் ஒன்றும் எழுதவில்லை. ஆனால் நம் பொருமை எல்லை மீறிவிட்டது. இன்று முதல் தடவையாக ஹஸ்ரத் மௌலானா மஹ்தூம் ஷாஹ் பன்னேரிக்காக எழுதும்படி நேரிட்டது. ஏனெனில் அவர் யாதொரு குற்றமும் அறியாதவர். பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு எதிராக எந்த நடவடிக்கையிலும் அவர் ஈடுபட்டிருக்கவில்லை. தவிர அவர் ஒரு பெரிய ஞானி. இந்த நிரபராதியை கோட்டைச்சிறையில் அடைத்து தொந்திரவுக் காளாக்குவது எவ்விதத்திலும் சகிக்க முடியாது. இவருடைய சிறைவாசம் இவருடைய பெருமையைக் கண்டு பொருமை கொண்ட சில மந்திரிகளின் பேனா முனையே.

'ஆஸாத்' லாஹூர்.

O O O

மூன்று மாத சிறை தண்டனை

நமக்கு டாக்டர் கான் சாஹிபுக்கு மூன்றுமாத சிறை தண்டனை அளித்து ஹரிப்பூர் ஹஸாரா சிறையில் வைத்திருப்பதைக்குறித்து ஆச்சரியமில்லை இச்சமயத்தில் கான் சகோதரர்கள் மட்டுமல்ல அவர்களுடைய உறவினர்களும் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு எதிராக மந்திரிசபை தொடர்ந்திருக்கும் குற்றமும் ஒன்றே ஒரே வலையில் கணக்கற்ற மீன்களைப் பிடிப்பதுபோல் ஒரே குற்றத்தில் கான் சகோதரர்களுடைய பூரா வம்சத்தையும் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றனர், ஆனால் ஒரு விஷயம் நம்மைக் கவலையிலாழ்த்துகிறது. இவர்களை ஒருதடவை கூட நீதி ஸ்தலத்திற்கு கொண்டு வரவில்லை என்பதுதான் அப்பெருங்கவலை. இதிலிருந்து கையூம்கான் மூளையில் ஏறியிருக்கும் துவேஷ விஷம் நன்கு வெளிப்படுகிறது. அவர் நிதானத்தை இழந்து கொடுமையாட்சி நடத்துகின்றார். அத்துடன் கான் சகோதரர்கள் கையில் மந்திரிசபை இருக்கும்பொழுது கையூம்கானை கூப்பிட்டு மந்திரி பீடத்தில் அமர்த்தி கௌரவித்ததற்கு கைமேல் பலன் கிடைத்தது,

'மக்ரிபி பாகிஸ்தான்' லாஹூர்.

O O O

மௌலானா பஸல் இலாஹிக்கு சிறை.

நம் எதிரில் நடக்கும் கொடுமைகளை நம்மால் அறிந்துகொள்ள முடிவதில்லை. ஏனெனில் அவைகள் புரிந்துகொள்ளும் அளவுக்கு ஒன்றுமே நடைபெறுவதில்லை எந்த குற்றத்துக்காக ஹஸ்ரத் மௌலானா பஸல் இலாஹி வஸீராபாதியை போலீஸார் கைது செய்திருக்கிறார்கள்? அவருக்கு எதிராக சாற்றப்படும் குற்றங்கள் மிகவும் விநோதமாக இருக்கின்றன. அவர் இன்று குற்றம் செய்யவில்லையாம் 28-வருஷங்களுக்கு முன் குற்றம் செய்தாராம்' 1920-ல் அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக சதி செய்தாராம். இந்தியாவிலிருந்து தன்னுடைய சகாக்களுடன் இந்திய எல்லையைத் தாண்டி சில குன்றுகளில் தங்கி இந்திய விடுதலைக்காக பிரிட்டிஷாருக்கு எதிராக இந்திய அரசாங்கத்துக்கு தொல்லைகளை விளைவித்தாராம். அவரும் அவருடைய சகாக்களும் வெள்ளையர்களை எதிர்க்கும் முஜாஹிதீன் என்று

அழைக்கப்பட்டனராம். இவர்கள் 27-வருஷங்கள் இந்தியாவுக்கு வெளியே இருந்து வந்தனர். அக்காலத்தில் அவர்கள் ஆங்கிலேய அரசாங்கத்துக்கு எதிராக நடந்து வந்திருப்பினும் பண்டித ஜவஹர்லால் நேரு அதிகார பீடத்தில் அமர்ந்ததும் மௌலானா பஸல் இலாஹியும் அவருடைய சகாக்களும் இந்தியாவுக்கு வர அனுமதியளித்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். இந்திய அரசாங்கம் மௌலானா பஸல் இலாஹி கோஷ்டியினருக்கு எதிராக இருந்த எல்லா குற்றச்சாட்டுகளையும் வாபஸ்பெற்றதும் அவர்கள் இந்தியாவில் வந்து பாகிஸ்தான் எல்லையில் ஒரு வருஷமாக வசித்து வந்தனர். அவருடைய குற்றம் யாது? அவர் பெயரில் இருந்த தடை உத்தரவை பண்டித நேரு ரத்து செய்தது குற்றமாயிருந்தால் அது பண்டித நேருவின் குற்றமாக இருக்கலாம். ஆனால் மௌலானா பஸல் இலாஹி கோஷ்டியினரின் குற்றமாக இருக்க முடியாது. அல்லது சென்ற 28 வருஷத்துக்கு முன்னால் பிரிட்டிஷாரை எதிர்த்து இந்திய சுதந்திரபோராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு தன் சகாக்களுடன் வெளியேறி வெள்ளையரசாங்கத்துடன் போராடியது குற்றமாக இருந்தால் அதே குற்றத்தின் காரணமாகத்தான் பாகிஸ்தானும் கிடைத்ததென்றும் தங்கு தடையின்றி சொல்லுவோம். இந்திய சுதந்திரத்துக்கு போராடியதுவாஸ்தவத்தில் குற்றமானால் வெள்ளையர்கள் அரசாங்கம் மட்டுமே மௌலானாவை தண்டித்திருக்கவேண்டும் மிஸ்டர் ஜின்னாவின் அரசாங்கம் ஏன் தண்டிக்க வேண்டும்.? வெள்ளையர் அரசாங்கம் ஒருக்கால் தன் எதிரிகளை கண்டிக்க ஜின்னா அரசாங்கத்துக்கு அதிகாரம் அளித்திருக்கின்றது போலும்!

'ஆஸாத்' லாஹூர்.

வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.

நச்சாந்துபட்டி

15—8—48 காலை கொடியேற்று விழாவும், மாலை ஊர்வலமும் நடந்தது. பிறகு ஸ்ரீ K. ராஜகோபாலய்யங்கார் தலைமையில் நேத்தாஜி மைதானத்தில் பொதுக்கூட்டம் நடந்தது. திரு. ராமசாமி அவர்கள் சொற்பொழிவாற்றினர். கூட்டம் ஜயகோஷத்துடன் முடிவடைந்தது.

முரு. இராமநாதன்,
காரியதரிசி, கி. கா. கமிட்டி, நச்சாந்துபட்டி.

மேலப்பாளையம்

திருநெல்வேலி ஜில்லா மேலப்பாளையம் கொட்டிக்குளம் காமராஜ் தேசிய வாலிபர் சங்கம் சார்பாக மேலப்பாளையம் டவுன் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆலிஜனாப் V. S. T. முகம்மது இப்ராஹிம் சாஹிப் அவர்கள் ஆதரவில் சுதந்திர விழா கொண்டாட்டம் நடந்தது. தேசியக்கொடியை ஏற்றிவைத்து ஜனாப் V.S.T முகம்மது இப்ராஹிம் "நாம் நேரு சர்க்காரை எப்படி ஆதரிக்கவேண்டும்"? என்பதைப்பற்றி விரிவாக சொற்பொழிவாற்றினர். மாலை ஊர்வலமாகச் சென்று பாடசாலை சிறுவர் சிறுமிகளுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

A. அருணகிரி நாடார்,
காரியதரிசி, கா. தே. வா. சங்கம், மேலப்பாளையம்.

மேலப்பாளையம் டவுன் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் சுதந்திரதினவிழாக் கொண்டாட்டம் ஜனாப் V. S. T. முஹம்மது இப்ராஹிம் தலைமையில் நடைபெற்றது. ஜனாப் V. S. T. முகம்மது இப்ராஹிம் முக்கிய இடங்களில் கொடியேற்றிவைத்தார். மாலை ஊர்வலத்துடன் மாணவ மாணவிகளுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. இரவு தமுஸ்தாசிம் பங்களாவில் ஜனாப் V. S. T. முஹம்மது இப்ராஹிம் அவர்களால் விருந்து எல்லோருக்கும் அளிக்கப்பட்டது.

மேற்படி சுதந்திர விழாவிற்கு ஆதரவு காட்டியவர்களுக்கும் குறிப்பாக ஜனாப் V. S T. முஹம்மது இப்ராஹிம் சாஹிப் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

M. K. காதர் மொய்தீன் சாஹிப்,
காரியதரிசி,
டவுன் காங்கிரஸ் கமிட்டி, மேலப்பாளையம்

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது "ஆஸாத்" விற்பனை செய்ய

ஏஜெண்டுகள் தேவை.

வளரும் ஜனநாயகம்—4.

—:(தாராசு).—

நாட்டைப்பரிபாலிக்கும் அதிகாரம் எந்த குறிப்பிட்ட வகுப்புகள் அல்லது கட்சிகளிடமில்லாமல், சமூக மக்கள் எல்லோரிடமும் இருப்பதுதான் ஜனநாயகம். ஜனநாயகம் என்பதற்கு இவ்விதமாகத்தான் அரசியல் துறையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. சமூகத்திலுள்ள எல்லோருடைய கருத்துமோ, அல்லது பெரும்பான்மையினருடைய கருத்தோ ஒரேவிதமாக இருக்கவேண்டுமென்பது ஜனநாயகத்தின் உட்கருத்தாகும். பிரைஸ் என்பவர் எழுதியுள்ள "நவீன ஜனநாயகங்கள்" என்ற புத்தகத்தில்; "திறமையுள்ள மக்களின் பெரும்பான்மையோரின் விருப்பப்படி நடப்பதுதான் ஜனநாயகம்" என்கிறார். மக்களில் பெரும்பான்மையோராவது அரசின் விஷயங்களைப் பற்றி தெரிந்துகொண்டிருக்கவேண்டும், என்பதுதான் இதன் பொருள். அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரையில் மக்களின் பலம், சற்றேறக்குறைய, அவர்களின் வாக்குரிமையின் பலத்துக்கு சமமாக இருக்க வேண்டுமென்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். இதைப் பொதுப்படையான கருத்து என்றுதான் தீர்மானம் செய்யவெண்டும். ஜனநாயகமேற்படவேண்டுமானால், சமூகத்தினர் அனைவருக்கும் அரசாள்வதற்குண்டான திறமை யிருக்க வேண்டுமென்பதோ, அல்லது அத்தகையவர்கள்தான் வாக்களிக்கவேண்டுமென்பதோ அவ்வளவு அவசியமாகத்தோன்றவில்லை; இம்முறையை ஒப்புக்கொண்டால், அது பெரும்பான்மையோர் அரசாக இருக்கமுடியுமே தவிர, ஜனநாயக அரசாகாது.

வயது வந்தவர்களெல்லோருக்கும் வாக்குரிமையளிப்பதுதான் ஜனநாயகம் என்பது தற்காலதீர்மானமாகும், இதைத்தான் மிகச்சிறந்த ஜனநாயகம் என்றுகூட கூறப்படுகிறது. எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் இம்முறை சிறப்பாகத்தோன்றிய போதிலும், இதில் ஒரு மிதமில்லாமமையும் தோன்றுகிறது. சமூகத்திலுள்ள எல்லாப்பிரிவினரும், விஷயமறிந்தவர்களாக இருந்து, ஜனநாயக அரசு நடப்பதாக நம்புவார்களேயானால், ஜனநாயகத்தின் லட்சியம், தன்மை ஆகிய இவற்றைப் பொறுத்தவரையில் ஜனநாயகமென்றே சொல்ல முடியும்.

மேலும் பல வகுப்பினருடைய அபிப்பிராயமும் பிரதிபலிக்குமென்று கூறலாம். இவ்விதமில்லாமல் எண்ணிக்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பிட்டு, ஜனநாயகம் என்று கூறுவது சரியாகத்தோன்றவில்லை. எந்த தேசத்திலும், அந்த தேசத்தின் ஜனத்தொகையில் முக்கால் பங்கினர் வாக்குரிமை பெற்றிருப்பது கடினமாகத் தோன்றுகிறது; யோசித்துப்பார்ப்போமேயானால் இல்லையென்றேசொல்லி விடலாம். வாக்குரிமையில்லாதவர்களின் விகிதாசாரம் ஒவ்வொரு சமூகத்திலுமதிகமாகவேயிருக்கும்; குறைவான ஜனத்தொகையுள்ள தேசங்களில், வயது வந்தவர்களுக்கு வாக்குரிமையளிப்பது நியாயமாகும், ஆனால் பெரிய தேசங்களில், அதிகமான ஜனத்தொகையைக் கொண்டதாக இருந்தபோதிலும், ஜனநாயகமேற்பட வேண்டியதற்காக, ஜனத்தொகையில் பாதிப்பங்கிற்குமேல் வாக்களிக்க வேண்டுமென்ற சித்தாந்தமும் அவசியமில்லை. நம் தேசத்தில் பாதியைவிட குறைவான வாக்காளர்கள் தானிருந்தார்கள், வயது வந்தவர்களின் அடிப்படையில் நிர்ணயிக்கும் போது பாதிப்பேருக்குமேல் வாக்குரிமையை பெறமுடிகிறது. இதனால் சரியான பிரதிநிதித்வமேற்பட முடியுமென்று கூறலாம்.

ஜனநாயகத்தில் இரண்டுவிதங்களிருக்கின்றன. ஒன்று நேரடியானது, மற்றொன்று மறைமுகமானது அதாவது பிரதிநிதிகளின் மூலம் நடத்தப்படுவது. மக்களெல்லோரும் ஒன்றுகூடி அரசியலதிகாரத்தை சட்டப்படி செலுத்துவதுதான் நேரடியானமுறையாகும். சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட முறையின்படி, மக்களுக்காக மக்களின் மூலமாகவே பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அரசை நடத்துவது மறைமுகமான ஜனநாயகமாகும். மிகவும் குறைந்த ஜனத்தொகையுள்ள தேசங்களில்தான் நேரடியான ஜனநாயகம் நடத்தமுடியும். பெரிய தேசங்களில் இம்முறை எதிர்பாக்கும் பயனைத்தராது. பொது விஷயங்களிலும், அரசாங்கத்தின் முடிவுகளை நிர்ணயிப்பதிலும், மக்களில் ஒவ்வொருவரும் தானே நேரில் பங்கெடுத்துக்கொள்ளும் ஆட்சி முறையில் ஒரு லட்சம் வாக்காளர்கள் என்பதே பெரிய தொகையென்று அரிஸ்டாடல் கூறியுள்ளார். ஒவ்வொருவரும் அரசாங்கத்தில் சம அளவுக்கு மற்றவர்களைப்போலவே உரிமையை யனுபவிக்கவேண்டுமென்று கூறுவதும், கோருவதும், பெரியபொதுக்கூட்டங்களின் மூலம் அரசாங்கத்தை நடத்துவது போலாகும், இம்முறையானது நிச்சயமாக அராஜகத்திலோ, அல்லது சர்வாதிகாரத்திலோதான் முடியவேண்டும். ஸ்விட்ஜர்லாந்து தேசத்தில் நேரடி, மறைமுகம் இரண்டும் கலந்த ஜனநாயக முறை கையாளப்படுகிறது; ஆனால் இதை சரி

யான ஜனநாயகமாக அறிஞர்கள் கருதவில்லை. இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இரண்டு தேசங்களிலும் நடைபெறும் அரசியல் முறையானது கூடுமான வரையில் ஜனநாயகத்தை ஒட்டியே தானிருக்கிறது; சில குறைபாடுகளுமிருக்கின்றன; ஆனால் நமது புதிய திட்டத்தில் இத்தகைய குறைபாடுகள் நிச்சயமாக இருக்காது என்று கூறமுடியாவிட்டாலும், கூடுமான வரையில் குறைபாடுகளை நீக்க வசதி செய்யப்படும் என்று அறிய முடிகிறது.

வயது வந்தவர்களின் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதித்வ ஆட்சி முறையிலும் சில குறைபாடுகளிருக்கத்தான் செய்யும், இருந்தபோதிலும் அவைகளை சமய சந்தர்ப்பங்களை ஒட்டி அகற்றிவிட வேண்டியதுதான் சிறந்தசெய்கையாகும். சட்ட சபைக்கு அங்கத்தினர்களை தேர்ந்தெடுப்பது, நிர்வாகிகளை பொறுக்குவது போன்ற சில முக்கிய விஷயங்களில், சர்வஜன வாக்கு (Referendum) எடுப்பது, மக்களே சட்டமியற்றும் உரிமைகளைபெற்றிருப்பது, பிரதிநிதிகளை நீக்குவது போன்ற சில சாத்யமான முறைகளின் மூலம், மக்கள் தங்களதிகாரத்தை செலுத்த முடியும்; இத்தகைய முறைகளெல்லாம் சில முற்போக்கான தேசங்களில்தான் நடைபெறுகின்றன. நம் நாட்டைப் பொருத்தவரையில், இந்த முற்போக்கான முறைகளைப்பற்றி, இப்பொழுது நிச்சயமான முடிவுக்கு வர முடியாது.

சட்டசபைக்கு பிரதிநிதிகளைமக்கள்தேர்ந்தெடுக்கிறார்கள், அதன்பிறகு பிரதிநிதிகளுக்கும், வாக்காளர்களுக்கும் யாதொரு விதமான சம்பந்தமுமிருப்பதாகத் தெரியவில்லை. சட்டசபையில் நடக்கும் எல்லாவிஷயங்களையும் மக்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள் என்றும் சொல்ல முடியாது. இம்மாதிரியான குறைபாடுகள் நம் தேசத்தில் அதிகமாக இருப்பதால் மக்களின் உரிமையை நிலைநாட்டும் முறைகளைப்பற்றி திடமாக முடிவு சொல்ல முடியவில்லை. கல்வியறிவும், பொது அறிவும் குறைந்திருப்பதுதான் காரணம் என்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. சில காரணங்களினால் சரியான முறையில் தகுதியான அபேட்சகர்களை தேர்ந்தெடுக்க முடிவதில்லை. சாமர்த்தியமும், நேர்மையுமுள்ள அபேட்சகர்கள் வாக்காளரின் ஆதரவைப் பெறமுடியாமலிருக்கலாம், சில சமயங்கள் இத்தகையவர்கள் பொது மக்களின் கோபத்துக்கு கூட இலக்காக நேரலாம். தகுதியில்லாதவர்கள் வாக்காளர்களை தட்டிக்கொடுத்தும், ஆசை காட்டியும் தனக்கு சாதகத்தை தேடிக்கொள்ள முடியும். கட்சி முறையை கைக்கொண்டிருக்குமிடங்களில், கட்சிகளே அபேட்சகர்களை பொறுக்கி விடுகின்றன. கட்சியின் சார்பாக நிறுத்தப்படும் அபேட்சகர்களுடையவோ, அல்லது கட்சியின் ஊழல்கள் அல்லது குறைபாடுகளையோ, மக்கள் உணராமலிக்கும் படிச் செய்யவும், அல்லது ஏற்கனவேயே உள்ள குறைபாடுகள் வெளிக்குவாரமல் மறைத்து பொதுமக்களின் மனதைக் கவர்ந்து வெற்றி பெருவதற்கு தகுந்த முறையை கையாளவேண்டிய நிர்ப்பந்தமேற்படுகிறது. ஹாஸ்யமான பிரசங்கமோ, அல்லது ஆபாசமான வசைமொழிகளைக் கொண்ட ஒரு பேச்சோ, ஒரு கூட்டத்திலிருக்கும் மக்களை கவர்ந்துவிடுமென்பதில் ஐயமில்லை. இத்தகைய சுலபமான முறையை கைக்கொண்டு கட்சியின் பலத்தை கட்சியாளர் உறுதிப்படுத்திக்கொள்ள முயலுகிறார்கள், வெற்றியும் பெற்றுவிடுகின்றார்கள், தேர்தல் காலங்களில் பல பேச்சாளர்களைக் கொண்டு ஒவ்வொரு இடத்திலும் பொதுக்கூட்டங்கள் நடத்துவதின்நோக்கமே வெற்றி பெருவதற்காகத்தான். வாக்காளர்களே ஒரு சரியான முடிவுக்கு வந்து எந்த தேர்தலிலும் வாக்களிக்கிறார்கள் என்று சொல்லமுடியாது.

திறமையும், யோக்யதையுமுள்ள அபேட்சகர்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படாமலோ, அல்லது தேர்தலுக்கு நிற்க முடியாமலோ இருப்பதினால்தான் மிகச்சிறந்த பிரதிநிதிகள் கிடைப்பதில்லை. தேர்தல் முறை மட்டும் இதற்கு காரணம் என்று கூறமுடியாது. தேர்தலிலேற்படும் தோல்வியின் பயமும், தேர்தல் செலவைத்தங்க முடியாமல் போவதும், சூழ்ச்சிக்குத் தக்கபடி சூழ்ச்சி செய்யத்தெரியாமையும், நிறைவேற்ற முடியாதவைகளை நிறைவேற்றுவதாக வாக்களிக்கமுடியாமையும், காலத்துக்கும், சமயத்துக்கும் தக்கபடி கொள்கைகளை மாற்றிக்கொள்ள சம்மதிக்காமலிருப்பதும், சரியான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படாததற்கு காரணங்களாக இருக்கின்றன.

அரசியலில் ஈடுபட்டு, அதனாலேற்படும் கஷ்டங்களை ஏற்கத்தயாராக இருந்தாலொழிய, திறமையும், யோக்யதையும் மட்டும் ஒருவரை சரியான அபேட்சகராக செய்து விடமுடியாது என்பது சிலருடைய முடிவாகும்; இதற்குண்டான விரிவான பதிலைக்கூறுவது பெருந்தவறாகும். திறமையும், யோக்யதையுள்ளவர்கள் போதுமான அளவு நமது தேசத்திலிருக்கிறார்கள் என்று நிச்சயமாகக்கூறமுடியாது. திறமை, அனுபவம், யோக்யதை ஆகியவைகள் தேசத்தின் சேவைக்கு அவசியமென உணரும் நிலையை, இப்பொழுதுள்ள தேர்தல் முறைகள் அங்கீகரிக்கவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்,

இம்மாதிரியான குறைபாடுகளை நீக்குவதற்கு சில வரையறைகளை ஏற்படுத்தவேண்டும்.

இரண்டு தடவைகளுக்குமேல் எவரும் மக்களின் பிரதிநிதியாக இருக்கக்கூடாது என்று நிர்ணயிக்க வேண்டியதவசியம். ஒருவரே தொடர்ந்தாற்போல் பிரதிநிதியாக இருந்துவருவது, வளரும் ஜனநாயகத்துக்கு அவசியமெனத் தோன்றவில்லை ஒரு குறிப்பிட்ட திறமைக்கும், யோக்கியதைக்கும குறையாத பிரதிநிதிகளை மாற்றுவதின் மூலம், அதிக பலமுள்ள ஊக்கமுள்ள நிர்வாகம் அமையக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். இந்த முறைகளின் நன்மையை மட்டும் மக்கள் உணர்ந்தால் பொறுப்புணர்ச்சியில்லாமல் ஒரே முறையில் விவகாரங்களை நடத்தும் பழைய முறைகளையும், சில கொடுமைகளையும் நிச்சயமாக அகற்றிவிடலாம். நிர்வாகிகளின் காலத்தை கட்டுப்படுத்துவதை விட, பிரதிநிதிகளின் பதவிக்காலத்தை கட்டுப்படுத்துவது வளரும் ஜனநாயகத்துக்கு இன்றியமையாததாகும். பிரதிநிதிகளுக்கு ஊதியம் கொடுப்பதை ஜனநாயக முறையில் வரவேற்கப்படவில்லை; இத்தகைய சேவைகளுக்கு ஊதியம் கொடுக்கும் முறை யோக்கியதைக் குறைவை யுண்டுபண்ணுமென்று கருதியே பிளாட்டோ, அரிஸ்டாடல் போன்றவர்கள் கண்டித்திருக்கிறார்கள் மந்திரிகளுக்கும், பார்லிமெண்டரி காரியதரிசிகளுக்கும் ஊதியம் கொடுக்கவேண்டிய தவசியமானல், பிரதிநிதிகளுக்கும் கொடுக்கத்தான் வேண்டும். சேவையைவிட ஊதியத்தை அதிகமாக மதித்து ஊதியம் பெறுவதற்காக தன்னுடைய திடமான கொள்கைகளை கைவிட்டு, கட்சியை ஆதரிக்கும் ஒரு யந்திரம்போலிருக்கவேண்டிய நிலையும் ஏற்படலாம். ஊதியம் கொடுக்கும் விஷயத்தில் பலகுறைபாடுகளிருந்தாலும் அதற்கு ஒரு சரியான முறையை ஏற்படுத்துவது அவசியமாகும். இவ்விதமான சீர்திருத்தங்களை செய்யும்போது, அரசியலைத்தொழிலாகக் கொண்டு பொருள்தேடும் பழக்கம் குறைவதுடன் தேசபக்தியுள்ளவர்கள் நாட்டிற்கு சேவை செய்யவும் முடியும். ஜனநாயகமும் வளரும்!

மதகுசாலை

1948 ஆகஸ்ட் 15-ல்காலை 7-மணிக்குமுள்ளங்குடி கிராமகாங்கிரஸ்கமிட்டி தலைவர் S. S குழந்தைவேல் செட்டியார் தேசியக்கொடி ஏற்றி வைத்தார். மாலை முத்தாதத்தில் மேளக்கச்சேரி, வாண வேடிக்கைகளுடன் மகாத்மா காந்திஜியின் திருஉருவப்பட ஊர்வலமும் இரவு பொதுக்கூட்டமும் நடந்தது.

M. S. வைத்திநாதன்,
காரியதரிசி, மு. கி. கா. கமிட்டி

அதிராம்பட்டணம்

15—8—48 காலை காங்கிரஸ் மைதானத்தில் பட்டுக்கோட்டை ஸ்ரீ R. M. கோவிந்தசாமி செட்டியாரால் தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டு கொடி வணக்கமும் I. N. A. அணிவகுப்பும் நடைபெற்றது. மாணவ மாணவிகளுக்கு தின் பண்டங்கள் வழங்கப்பட்டன

மாலை காங்கிரஸ் மைதானத்தில் ஸ்ரீ R. M. கோவிந்தசாமி செட்டியார் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது அவ்வமயம் கும்பகோணம் 'ஆஸாத்' ஆசிரியர் ஜனப் மௌலானா அப்துல் ஹக்கீம் கீரலத்தூர் ஸ்ரீ க. மீனாக்ஷிசுந்திரம் பிள்ளை, முத்துப்பேட்டை ஸ்ரீ A. S. N. சாமித்துரைத் தேவர் முதலியோர் சொற்பொழிவாற்றியபின் கா. கமிட்டித் தலைவர் ஜனப் S. S. இபுராஹிம் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

ரா. வாதராஜலு, காரியதரிசி.

கீழக்கரை

மாயாகுளம் கிராம காங்கிரஸ் கமிட்டி சார்பில் ஸ்ரீ வெள்ளைய நாடார் தலைமையில் மாணவ மாணவிகள் தேசிய கீதம் பாட கீழக்கரை நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஜனப் K. M. மஜீது காந்தி கொடி ஏற்றி வைத்தார். உபகாரியதரிசி ஸ்ரீ மு. அ. அரியமுத்துசெட்டி சுதந்திர பிரதிக்ஞையை வாசித்து கிடைத்த சுதந்திரத்தைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டார். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிந்தது.

க. சண்முக நாடார், காரியதரிசி.

சித்திலிங்கமடம் ஜவஹர் வாலிபர் சங்கம்

15—8—48-ல் ஷை சங்கத்தாரும், உயர்தர போர்டு ஆண் பெண் பாடசாலை ஆசிரியர் ஆசிரியை, மாணவ மாணவிகளும், கிராம பொதுமக்களும், முதலாண்டு சுதந்திரதின விழாவை சிறப்பாகக் கொண்டாடினர். காலை மகாத்மாஜீ படஊர்வலமும், தா. கா. கமிட்டி காரியதரிசி நடராஜம் பிள்ளையால் கொடியேற்று வைபவமும் நடந்தது. மாலை பாடசாலையில் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் தலைமையில் கூட்டம் நடந்தது. தியாகிகளுக்கும் மகாத்மாவுக்கும் வணக்கம் செலுத்தினர்கள் நடராஜ பிள்ளை, சிவசங்கரம் பிள்ளை, வீராசாமி முதலியார், சுப்பிரமணிய அய்யர், ஷண்முகம் பிள்ளை முதலியோர் நாட்டின் நிலைமை, நம் கடமையும், மஹாத்மாவின் போதனை இவைகளைப்பற்றிப்பேசினர்கள். தலைவர் முடிவுரையுடன் குழந்தைகளுக்கு தின்பண்டம் வழங்க கூட்டம் முடிந்தது.

R. நடராஜன், காரியதரிசி.

சென்ற வாரத் தொடர்ச்சி.

காங்கிரஸா? சோஷியலிஸ்டு கட்சியா?

முஸ்லிம்கள் எதில் சேரவேண்டும்?

அன்வர்:- அதுவரை சோஷியலிஸ்டு கட்சியும் பல மடைந்து மக்களும் அதை வரவேற்கக்கூடிய நிலைமை யிலிருப்பர். இந்த இடைக்காலத்தில் நாட்டை சோஷியலிஸ புரட்சிக்கு தயார்செய்யவும் முடியும்.

ராமு:— அன்பர்களே! இந்த சம்பாஷணையால் நாம் அடைந்த முடிவென்ன?

பாபு:— முடிவை அன்வரும் ஒப்புக்கொள்வா ரென்று நம்புகிறேன்.

1. அதாவது அடுத்த ஐந்து வருஷங்கள் வரை நேரு சர்க்காரையும் காங்கிரஸையும் முழுமனதுடன் ஆதரித்து சர்க்காரை பலப்படுத்த வேண்டும்.

2. ஆயினும் இந்த இடைக்காலத்தில் நேரு சர்க்காரையோ அல்லது காங்கிரஸையோ கடிவாளமில்லாமல் விட்டுவிடக்கூடாது. நிர்மாணத்துறையில் அவர்களுடைய குறைகளை எடுத்துக்காட்டி அவர்களை நேரானவழியில் கொண்டுசெல்லசோஷியலிஸ்டுகட்சி எதிர்கட்சியாக இருக்கவேண்டும்.

3. அடுத்த ஏழெட்டு வருஷ இடைக்காலத்தை பிரசாரத்திற்காக பயன் படுத்திக்கொண்டு நாட்டை சோஷியலிஸத்திற்காக செப்பனிட வேண்டும்.

4. காங்கிரஸ், சோஷியலிஸ்ட் என்ற பேதமின்றி இரண்டு கட்சிகளும் நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவதில் முனையவேண்டும்.

5. சுதந்திர இந்தியாவின் இரண்டாவது பொதுத் தேர்தல்களில் சோஷியலிஸ்ட் கட்சியை அதிகாரத்துக்கு வரச்செய்து சேவையின் சந்தர்ப்பம் அதற்கு அளிக்கப்பட வேண்டும்.

அன்வர்:— இந்தமுடிவை மனப்பூர்வமாய் ஏற்கிறேன்.

ராமு:— எல்லா பிரச்னைகளும் ஒருவாறு தீர்ந்துவிட்டன.

பாபு:— ஒன்றைத்தவிர. அதாவது முஸ்லிம்களின் பிரச்னை. அவர்கள் எந்தக் கட்சியில் சேரவேண்டும். காங்கிரஸா? அல்லது சோஷியலிஸ்ட் கட்சியா? எதில் சேருவதால் முஸ்லிம்களுக்கு நன்மையுண்டு என்ற முக்கியமான பிரச்னை மட்டும் தீரவில்லை.

ராமு:—உண்மையில் அதி முக்கிய பிரச்னையை மறந்தே விட்டோம் இன்று சோஷியலிஸ்டுகள் முஸ்லிம்களை தங்கள் கட்சிக்கு இழுக்கின்றனர். இன்னொரு பக்கம் கம்யூனிஸ்டுகள் வலை வீசுகின்றனர். காங்கிரஸோ ஆதியிலிருந்தே அவர்களை அழைத்துக் கொண்டிருக்கிறது.

அன்வர்:— இது மிகவும் சிந்தனைக்குரிய பிரச்னை தற்சமயம் அதைப்பற்றி ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

பாபு:—பிரச்னையை தட்டிக்கழிப்பதால் பிரயோஜனமில்லை. அதைக்குறித்தும் ஏதாவதொரு முடிவு செய்தே ஆகவேண்டும்.

அன்வர்:— முஸ்லிம்கள் அனைவரும் சோஷியலிஸ்டு கட்சியில் சேருவதையே நான் வரவேற்கிறேன்.

பாபு:— ஏன் அப்படி?

அன்வர்:— முஸ்லிம்கள் ஒருஏழை சமூகம். நாட்டிலுள்ளஏதாவதொரு வகுப்பினருக்குசோஷியலிஸம் அவசியமென்றால் அவர்கள்முஸ்லிம்களாகத்தான் இருக்கமுடியும். சோஷியலிஸமே முஸ்லிம்களின் எல்லாப் பிரச்னைகளுக்கும் பரிகாரம். பிறகு வகுப்புப் பூசல்களும், உத்தியோகங்களுக்கான சல சலப்புக்களும், பொருளாதார பிரச்னைகளும் இருக்காது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பிரச்னையே பிரதானமாயிருக்கும். ஹிந்து முஸ்லிம் என்ற பேதம் மறைய சோஷியலிஸம் ஒன்றுதான் சிறந்தவழி.

பாபு:— தாங்கள் குறைகூறிவந்த ஸ்தாபனத்தில் சேராமல் முஸ்லிம்கள் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவும் முடியும். அதுதானே!

ராமு:— காங்கிரஸை திட்டுவதற்கு ஒரு புதிய மேடையும் முஸ்லிம்களுக்கு கிடைத்து விடும்.

பாபு:— ஒரு பக்கம் சோஷியலிஸ்டு கட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பவில்லை யென்றும் சொல்லுகிறீர்கள். இன்னொரு பக்கம் முஸ்லிம்களையும் சோஷியலிஸ்ட் கட்சியில் சேரும்படியும் அழைக்கின்றீர்கள். உங்களுடைய மனப்பான்மை புரிந்து கொள்ளமுடியவில்லையே!

அன்வர்:— முஸ்லிம்கள் சதா சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமென்பது விதியா?

பாபு:— அப்படியொன்றும் விதியில்லை ஆயினும் இன்று முஸ்லிம்களுக்கு சர்க்கார் ஆதரவு இருக்க வேண்டிய தவசியம்.

அன்வர்:— சட்டசபை பதவிகள், உத்தியோகங்கள், மந்திரி ஸ்தானங்களை தேடித்திரியும் முஸ்லிம்களுக்குத்தான் சர்க்கார் உதவி வேண்டும். அம்மாதிரியானவர்களின் எண்ணிக்கை ஐந்து சதவிகிதம்கூட

இல்லை. மீதியுள்ள தொண்ணூற்றைந்து சதவிகித முஸ்லிம்களின் நலன் சோஷியலிஸத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறது.

பாபு:— பொருளாதாரப் பிரச்னைசம்பந்தப்பட்டவரை இந்திய முஸல்மான்களின் நலன் சோஷியலிஸம் நிலை பெறுவதிலேயே இருக்கின்றது என்பது வாஸ்தவந்தான். ஆயினும் இன்று பொருளாதாரப் பிரச்னையைவிட அதிமுக்கியமான அடிப்படை பிரச்னையொன்று முஸ்லிம்களை எதிர்நோக்குகின்றது. இருப்பதா அல்லது அழிவதா என்பதே அப்பிரச்னையாகும். முஸ்லிம்களை இந்தியாவில் இருக்கச்செய்து அவர்களை பாதுகாக்கும் சக்தி எந்தகட்சிக்கும் உண்டு என்பதே பிரதானம் முஸ்லிம்களை வெளியேற்ற வேண்டும் அல்லது அடிமைப்படுத்தி வைக்கவேண்டும் என்ற எண்ணம் காங்கிரஸைப் போலவே சோஷியலிஸ்டு கட்சிக்கும் இல்லை. அவர்களுக்கு பூரண பிரஜா உரிமை வழங்கவேண்டுமென்றே சோஷியலிஸ்டு கட்சியும் விரும்புகிறது. ஆயினும் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடியசக்தி சோஷியலிஸ்டு கட்சிக்கு உண்டா, இல்லையா என்பதுதான் பிரச்னை.

அன்வர்:— ஹிந்து மஹாசபை, ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தைப் போன்ற ஸ்தாபனங்களை காங்கிரஸைவிட சோஷியலிஸ்டு கட்சி அதிகமாய் எதிர்த்து போராடி இருப்பதை நீங்கள் மறுக்கமுடியுமா?

பாபு.— நான் மறுக்கவில்லை. அன்பரே! பிரச்னை அதுவல்ல. பிற்போக்கு சக்திகளைவெற்றிகரமாக முறியடிக்கும் சக்தி சோஷியலிஸ்ட் கட்சிக்கு உண்டு என்று நீங்கள் சொல்ல முடியுமா? உங்கள் உணர்ச்சியை வரவேற்கிறேன். ஆயினும் இந்த வேலை உங்களுடைய சக்திக்கு மீறியதாகும். நாட்டில் காங்கிரஸ் பெற்றிருக்கும் சக்தியுடன் எந்த ஸ்தாபனமும் போட்டியிட முடியாது ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தை நொடிப்பொழுதில் தகர்த்து விட்டதை நீங்கள் பார்தீர்கள். காங்கிரஸைத்தவிர வேறுஎதாவதொரு சட்சி அதைசாதிக்க முடியுமா?

அன்வர்,— அப்படியானால் முஸ்லிம்கள்சோஷியலிஸ்டு கட்சியில் சேரக்கூடாது என்று சொல்லுகிறீர்களா?

பாபு.— இல்லை. நான் அப்படிச் சொல்லவில்லை முதலிலிருந்தே சோஷியலிஸ்டு கட்சியில் இருந்துவரும் முஸ்லிம்கள் அதிலேயே இருக்கட்டும். இன்றைய சூழ்நிலையைக்கண்டு பயந்து வேறு எதாவது ஒருகட்சியில் சேரவிரும்பும், சோஷியலிஸத்தில் நம்பிக்கை இல்லாத பேர்வழிகள், சோஷியலிஸ்ட் கட்சியில் சேராமலிருக்கட்டும். இன்று சோஷியலிஸ்டு கட்சியின் கதவைத்திறந்து விட்டால் லீகர்கள் அனைவருமே ஓடிவந்து புகுந்து கொள்வார்கள் என்பது நிச்சயம். சோஷியலிஸத்தைப்பற்றி அவர்களுக்கு அக்கறை யில்லை. காங்கிரஸை திட்டுவதற்கு ஒருமேடை மாத்திரம் கிடைத்தால் போதும்.

ராமு:—முஸ்லிம்கள் பிறவியிலேயேசோஷியலிஸ்டுகள்தான். இடைக்கால சர்க்காரில் நவாப் ஸாதா லியாகத் அலிகான் கொண்டு வந்த சோஷியலிஸ பட்ஜெட்டைக் குறித்து என்ன சொல்லுகிறீர்கள்? இந்தியமுதலாளிகள் கதறும்படி செய்து விட்டதல்லவா? இன்று சுதந்திர இந்தியாவில் மிஸ்டர் செட்டியார் கொண்டுவந்த பட்ஜெட்டையும் பாருங்கள்!

பாபு:— ஹிந்து முதலாளிகளை தீர்த்துக் கட்டுவதே நவாப் ஸாதாலியாகத் அலிகான் கொண்டு வந்த பட்ஜெட்டின் நோக்கம். இல்லையேல் இன்று பாகிஸ்தானில் அதேமாதிரியான பட்ஜெட்டைக் கொண்டு வந்திருக்கலாம். அதற்கு மாறாக இன்னும் பத்து வருஷங்கள்வரை முதலாளிகளுக்கு எவ்வித கடுமையான வரிகளும் விதிக்கப்பட மாட்டாது என்று அறிவித்திருக்கிறார். பார்த்தீர்களா! உங்களுடைய பிறவி சோஷியலிஸ்டை!

ராமு;—சர்க்கார் ஆதரவு இல்லாமல் முஸ்லிம்கள் ஜீவித்திருக்க முடியாதென்று சொல்லுவது வருந்தத்தக்கதும் சகிக்கமுடியாததுமாகும்.

பாபு:— வாலிபரே! உணர்ச்சி ததும்பும் பேச்சு உங்களுக்குப் பொருந்தலாம். ஆனால் ஆவேச முள்ள பேச்சும் உணர்ச்சி மிக்க கோஷங்களுமே முஸ்லிம்களை இந்த நிலைக்கு கொண்டுவந்து விட்டன என்பது என் அபிப்பிராயம். சர்க்காரை ஆதரிப்பது கேவலமென்றால் முஸ்லிம்கள் வெள்ளையர்களை கேவலமான முறையில் ஏன் ஆதரித்தனர்? நாட்டுக்குத் துரோகம் செய்து வெள்ளையர்களுடன் சேர்ந்துகொண்டு சுதந்திரக் கிளர்ச்சியை எதற்காக எதிர்த்தனர்? நாடு விடுதலையடைந்து விட்டபிறகு தங்கள் தேசிய சர்க்கார் அமைந்துவிட்ட பிறகு இன்று சர்க்காருடன் ஒத்துழைப்பதற்கு வெட்கம் வந்துவிட்டதாம்! பெரிய வீரர்களைப்போல் சர்க்காரை எதிர்த்து தங்களுடைய சுயமரியாதையின் கொடியை உயர்த்தப் போகின்றனராம்!

ராமு:— கோபித்துக் கொண்டீர்களா?

பாபு:— கோபிக்கவேண்டிய விஷயந்தான். முஸ்லிம்களின் அழிவைப் பார்த்தபிறகும் கூட உங்களுடைய கண் திறக்கவில்லை. பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பேசுகிறீர்கள்.

அன்வர்:— சரி! அந்த பேச்சை விடுங்கள் காங்கிரஸை எதிர்ப்பது தங்கள் மதக்கடமை என்று நினைக்கும் அளவுக்கு முஸ்லிம்களிடையே துஷ்பிர

சாரம் நடந்துவிட்டது. எனவே அவர்கள் காங்கிரஸில் சேர இஷ்டப்படாமல் ஒருகால் நடுநிலைமை வகிப்பதையும் வரவேற்கவும்கூடும்.

பாபு:— அதற்காகத்தானே நீங்கள் முஸ்லிம்களை சோஷியலிஸ்ட் கட்சியில் சேர்க்கப் பார்க்கிறீர்கள்? சோஷியலிஸத்தை ஆதரித்தாலும், ஆதரிக்கா விட்டாலும் காங்கிரஸை எதிர்ப்பதில் உங்களோடு ஒத்துழைப்பர் என்பது உங்கள் நம்பிக்கை போலும்! அப்படியானால் நீங்கள் சோஷியலிஸ்ட் கட்சியை அமைப்பதற்குப் பதிலாக காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணியை அமைக்கின்றீர்கள் என்றே சொல்லவேண்டும். முஸ்லிம்கள் நடுநிலைமை வகிக்கக்கூடுமென்கிறீர்கள். அரசியலில் நடுநிலைமை என்பதை வேறு வாாத்தைகளில் விளக்க வேண்டுமாயின் 'மரணம்' என்றே சொல்ல வேண்டியிருக்கும்.

அன்வர்:— சோஷியலிஸ்டுகள் காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணி அமைப்பதாகச் சொல்லுவது நியாயமல்ல. லீக் லீடர்களையும் வேறு காரணங்களுக்காக காங்கிரஸை விட்டு வெளியேறி சோஷியலிஸ்ட் கட்சியில் சேரவிரும்பும் பேர்வழிகளையும் நாம் சேர்த்துக்கொள்ளப் போவதில்லை. ஐக்கிய மாகாண முஸ்லிம்லீக் சட்டசபைக் கட்சித் தலைவர் மிஸ்டர் ஸஹீர் ஹஸன் லாரி ஆசார்ய நரேந்திர தேவிடம் நம் கட்சியில் சேர விருப்பம் தெரிவித்தார் நரேந்திர தேவ் அவரை சேர்த்துக்கொள்ள சம்மதிக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

ராமு:— திடீரென்று சோஷியலிஸ்ட் கட்சியில் சேரும் முஸ்லிம்களை ஹிந்துக்கள் சந்தேகிக்கத்தான் செய்வார்கள். காங்கிரஸை குறைகூறி சர்க்காரை பலஹீனப்படுத்துவதன் மூலம் பாகிஸ்தானுக்கு உதவ சோஷியலிஸவேஷத்தைப் போட்டுக்கொண்டுஐந்தாம் படைவேலை செய்வதற்கு புதிய அரங்கப் ஒன்றைமுஸ்லிம்கள் அமைத்துக் கொண்டனர் என்றே ஹிந்துக்கள் சொல்லுவர்

பாபு:— கடந்த 10, 12 வருஷங்களாக முஸ்லிம்களிடையே நடந்து வந்த பிரசாரத்தைப் பார்த்தால் அதைத்தவிர வேறு விதமாக முடிவு செய்வதற்கில்லை. இந்தியாவிலிருப்பது ஹிந்துக்களின் ஆட்சி. எனவே அதை எதிர்ப்பது முஸ்லிம்களின் கடமை என்ற பிரசாரமே நடந்து வந்திருக்கிறது. இன்று முஸ்லிம்களுக்கு சோஷியலிஸ்டு கட்சியில் இடம்கிடைத்துவிட்டால் காங்கிரஸைக்குறைகூறுவதில் அவர்கள் சோஷியலிஸ்டுகளையும் மிஞ்சிவிடுவர். அதனால் சோஷியலிஸ்ட் கட்சிக்கும் கெட்ட பெயரே ஏற்படும். எனவே முஸ்லிம்களைசோஷியலிஸ்டுகளாக்கவேண்டாம். வகுப்புவாத படுகுழியிலிருந்து ஒரே தாண்டில் சோஷியலிஸ சிகரத்தை எட்டிப்பிடிக்க முடியாது. முதலில் அவர்கள் தேசீய வாதிகளாகட்டும். பிறகு அவர்களைசோஷியலிஸ்டுகளாக்கலாம். படிப்படியாகத்தான் ஏறவேண்டும். ஒரேயடியாகத் தாண்டுவதில் தவறிவிழும் அபாயமிருக்கின்றது.

ராமு:— முஸ்லிம்கள் காங்கிரஸில் சேரவேண்டுமென்று வற்புறுத்துகிறீர்களே. காங்கிரஸ் அவர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்புகிறதா?

பாபு:— நிச்சயமாக விரும்புகிறது. முஸ்லிம்களுக்காக காங்கிரஸ் தன்னையே அபாயத்திற்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது. தன்னுடைய தேசீயத் தன்மையை இழக்க சம்மதிக்காத ஒரே காரணத்தினால் இன்று காங்கிரஸ் ஹிந்துக்களிடையே செல்வாக்கு இழந்துவருகிறது முஸ்லிம்களை இந்தியாவில் இருக்கும்படி செய்ய உழைத்ததன் பலனாகவே மகாத்மா காந்திஜி கொல்லப்பட்டார். முஸ்லிம்களுக்காக காங்கிரஸ் எவ்வளவோ செய்தும் முஸ்லிம்கள் காங்கிரஸின் அந்தரங்க சுத்தியை நம்பாமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். முஸ்லிம்களை மட்டும் காங்கிரஸ் ஒதுக்கிவிடும் பட்சத்தில் ஹிந்துக்களிடையே எவ்வளவோ செல்வாக்கு பெறமுடியும். நூறு வருஷங்கள்வரை அதையாரும் அசைக்கமுடியாது அதன் பிறகு முஸ்லிமகளின் நிலை என்னவாக இருக்குமென்று முஸ்லிம்கள் சிந்திக்காமலிருப்பது துரதிர்ஷ்டமாகும்

அன்வர்:— சென்றவருஷம் டிஸம்பர் மாதத்தில் இந்திய் முஸல்மான்கள் காங்கிரஸில் சேரவேண்டுமென்று லக்னோ மஹாநாடு தீர்மானித்தபிறகும் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர முன்வந்திருப்பதாகத் தெரியவில்லை அதற்காக வருந்தி என்ன செய்யமுடியும்?

பாபு:— உண்மையில் மஹாத்மாஜியின் தியாகத்திற்கும் பிறகு ஹிந்து வகுப்புவாதிகள் மீது சர்க்கார் எடுத்த கடுமையான நடவடிக்கைகளால் முஸ்லிம்கள் நிம்மதியடைந்திருப்பதாகத் தெரிகிறது. எப்பொழுதும்போல் இன்றைக்கும் அவர்கள் சர்க்காரையே நம்பியிருக்கின்றனர். ஒரு ஜனநாயக சர்க்கார் எந்த நிமிஷத்திலும் மாறலாம் என்பதை முஸ்லிம்கள் உணர்ந்து கொள்ளவேண்டியதவசியம். எதுவரை ஹிந்து முஸ்லிம்களிடையே பரஸ்பர நல்லுணர்ச்சியும், நல்லுறவும், அன்பும், நம்பிக்கையும் ஏற்படாதோ அதுவரை முஸ்லிம்களை எந்த சக்தியும் பாதுகாக்க முடியாது.

ராமு:— ஹிந்து முஸ்லிம்களிடையே பரஸ்பர நல்லுறவு ஏற்படுத்துவதற்கென்றே ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி அமைக்கப்பட்டதல்லவா?

பாபு:— அவர்களும் ஏதோ செய்து கொண்டுதானிருக்கின்றனர். இருப்பினும் நாம் தலைவர்களின்

அசிரத்தையால் அலுத்துவிட்டோம். உழைத்து உழைத்து களைத்து விட்ட தலைவர்களைவிட்டு இனி முஸ்லிம் வாலிபர்கள் முன்னணிக்கு வரவேண்டும். இல்லையேல் முஸ்லிம் சமூகமே அழிந்துவிடும் ஹிந்து பிற்போக்கு வாதிகளின் கிளர்ச்சிகள் இன்னும் அறவே ஓய்ந்துவிடவில்லை. மஹாத்மாஜியின் ஆத்மீக தியாகத்தால் ஓரளவுக்கு அடங்கியிருக்கின்றன. இந்த அருமையான சந்தர்ப்பத்தை இழக்காமல் ஹிந்துக்களுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டியது முஸ்லிம்களின் கடமை.

அன்வர்:— இனி முஸ்லிம்களிடையே பொதுத் தேர்தலின்போதுதான் பிரசாரம் செய்வது சாத்தியம்.

பாபு:— அதற்கு நேர்மாறாக நான் அபிப்பிராயப் படுகிறேன். தேர்தல்வரை அதாவது இன்றிலிருந்து இரண்டு வருஷங்கள்வரை ஹிந்து முஸ்லிம் ஐக்கியம் ஏற்படாமலிருந்தால் தேர்தலின்போது பெருங்குழப்பம் ஏற்படக்கூடும். வகுப்புவாத ஸ்தாபனங்கள் இன்னும் சாகவில்லை உயிருடனேயே இருக்கின்றன. கூட்டுத்தொகுதி அடிப்படையில் நடக்கப்போகும் தேர்தலிலும் அவை நிச்சயமாகக்கலந்து கொள்ளும் ஆனால் முஸ்லிம் லீக், ஹிந்துமஹாசபை என்பதற்குப் பதிலாக ஜனக்கட்சி, ஜனநாயகக் கட்சியின் பெயரால் போட்டிபோடும். முஸ்லிம் லீகும் ஹிந்துமஹா சபையும் அந்தரங்கத்தில் ஒரு முடிவுக்கு வந்து ஹிந்து முஸ்லிம் ஓட்டுகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்வர். இன்று பொதுமக்களின் கண்களில் மண்ணைத்தூவுவதற்காக மேடைகளில் ஒருவரைஒருவர் எதிர்த்து காரசாரமாக பேசிக்கொள்ளும் ஹிந்து முஸ்லிம் வகுப்புவாதிகள் காங்கிரஸை முறியடிக்கும் விஷயத்தில் ஒன்றுபடுவதும் சாத்தியமே. இதற்குமுன் இவ்விதம் நடந்துமிருக்கிறது. இனி நடக்கவும்கூடும்.

ராமு:— இங்கிலையில் சோஷியலிஸ்டு கட்சிக்கும் அபாயந்தான்!

பாபு:— ஆம் காங்கிரஸ், சோஷியலிஸ்ட் தகராறில் ஹிந்துக்களின் ஓட்டுகள் இரண்டாகப் பிரிந்து மஹாசபை அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அன்வர்:— அப்படி நடக்கமாட்டோம். வகுப்புவாதிகள் வெற்றியடைந்து காங்கிரஸ் தோல்வியுறுவதை எங்களால் சகித்துக்கொண்டிருக்க முடியாது அந்நிலையில் காங்கிரஸும் சோஷியலிஸ்ட் கட்சியும் நிச்சயம் ஐக்கியமாகிவிடும்

பாபு:— சபாஷ்! சோஷியலிஸ்ட் கட்சியிடம் நமக்கு என்றுமே நம்பிக்கையுண்டு. சோஷியலிஸ்டுகள் என்றுமே தேச நலனுக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர். அவர்களைக் குறித்து நாம் பெருமைப்படுகின்றோம். எனவே அக்கட்சி நீடித்திருப்பதையே நாம் விரும்புகிறோம். இந்தியாவின் மஹத்தான எதிர்காலம் சோஷியலிஸடு வாலிபர்களின் கையில்தான் இருக்கிறது. ஆயினும் இன்றைய நிலைமையில் அடுத்துவரும் பொதுத்தேர்தல்களில் காங்கிரஸின் வெற்றிக்கு உழைக்க வேண்டியது ஒவ்வொரு தேசபக்தனின் கடமையாகும். அப்பொழுததான் சுதந்திரம் நிலைக்கமுடியும். சோஷியலிஸம் நிலைநாட்டுவதற்கேற்ற சூழ்நிலையை சிருஷ்டிக்க முடியும். இந்தியாவில் முஸ்லிம்கள் நிலைத்திருக்க முடியும். இந்திய முன்னேற்றத்தின் கனவு நனவாக முடியும். வரப்போகும் பொதுத்தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வியுற்றால் இந்தியா தோல்வியுறும் என்பது நிச்சயம்.

ராமு:— அடுத்த தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றிபெறுமென்று நீங்கள் நம்பவில்லையா?

பாபு:— எதிரியை எப்பொழுதும் சக்தியற்றவனென்று மதிப்பது சரியல்ல அடுத்த தேர்தல்களில் காங்கிரஸுக்கு குறைந்தபட்சம் ஹிந்துக்களின் பாதி ஓட்டுகளாவது கிடைக்கக்கூடுமானால் பாக்கியுள்ள நாலரைக் கோடி முஸ்லிம்களின் ஓட்டுகளைப் பெற்று காங்கிரஸை வெற்றியுறச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேயே இப்பிரச்னையே நாம் அணுக வேண்டும் காங்கிரஸ் முஸ்லிம்களை விரும்புகிறதா? என்று கேட்டீர்கள். நிச்சயமாக விரும்புகிறது. இத்தடவை காங்கிரஸின் வெற்றி முஸ்லிம்களைப் பொறுத்தே இருக்கின்றது என்று சொல்லுவது மிகவும் பொருந்தும். காங்கிரஸுக்கு முஸ்லிம்கள் தேவை முஸ்லிம்களுக்கு காங்கிரஸும் தேவை முஸ்லிம்கள் புறக்கணித்தால் காங்கிரஸ் முடிந்துவிடும். காங்கிரஸ் முஸ்லிம்களை புறக்கணித்தால் முஸ்லிம்கள் முடிவடைந்துவிடுவர். காங்கிரஸும் முஸ்லிம்களும் பிணைக்கப் பட்டிருக்கின்றனர். பரஸ்பரம் நிலைத்திருக்க பரஸ்பர ஒத்துழைப்பு அவசியம்.

ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம். ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.

அதை ஆதரிப்பது
உங்கள் தேசீயக் கடமை.

மானேஜர், ஆஸாத். குடந்தை.

'ஆஸாத்' அன்பரின் வேண்டுகோள்.

"பல விஷயங்கள் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் உண்மையில் அவை உங்களுக்கு நன்மை பயக்கக்கூடியனவாக இருக்கும்."—திரு குர்-ஆன்.

ஏராளமான நஷ்டத்தையும் சகித்துக்கொண்டு ஆஸாத் சேவை செய்துவருகின்றது. அதன் சேவை மஹத்தானது. எவ்வகுப்பினராயினும் இந்தியர்களாகிய ஒவ்வொருவரும் ஆஸாதின் சேவையை ஆதரிக்கவேண்டியதவசியம். வெள்ளையர்களும் அவர்களுடைய ஏஜண்டுகளும் சிருஷ்டித்துச் சென்ற சூழ்நிலையை சீக்கிரமே மாற்றி நாட்டின் அமைதி சமாதானத்தைக் காப்பாற்றி ஒற்றுமையை நிலைநாட்டி எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்த நிலைமையையும் சமாளிக்க இந்தியர்களை தயார்செய்ய வேண்டிய முக்கிய வேலை இன்னும் முடிவடையவில்லை

தென்னாட்டில் ஆஸாதுக்கு தனிப்பட்ட முக்கியத்துவம் உண்டு. லீக் பிரசாரத்தின் விளைவாக பிரிந்திருந்த ஹிந்து முஸ்லிம் உள்ளங்களை ஆஸாதின் புரட்சிகரமான போக்கால் பிணைத்துவருகின்றது. நாட்டின் இரண்டு பெரிய சமூகங்களிடையே லீக் எழுப்பியிருந்த வெறுப்புக் கோட்டைகளை தகர்த்து தரைமட்டமாக்கி ஒற்றுமையின் புனிதமான உன்னத மாளிகையை ஆஸாத் நிர்மாணித்து வருகின்றது. மிஸ்டர் ஜின்னாவின் பொய் பிரசாரவலையில் சிக்கியிருந்த முஸ்லிம்களை மீட்டு மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தலைமையின் கீழ் ஒன்று திரட்டும் வேலையை வெற்றிகரமாகச் செய்கின்றது. தென்னாட்டின் அமைதிக்கு ஆஸாத் அவசியம். அதன் வளர்ச்சிக்காக முயற்சிப்பது நம் கடமை. ஆஸாதுக்கு உதவுவதை தேசீய சேவையாகப் பாவித்து சாத்தியமான அளவுக்கு ஹிந்து சகோதரர்கள் உதவியிருக்கின்றனர். உதவிசெய்தும் வருகின்றனர். சென்னை மாகாண காங்கிரஸ் முஸ்லிம்களில் பிரபலஸ்தரான ஹாஜி M. அப்துர்ரஹ்மான் சாஹிபைப்போன்ற ஒரு சிலரைத் தவிர ஆஸாத் போன்றதொரு பத்திரிகையின் அவசியத்தை முஸ்லிம் பொதுமக்கள் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இம்மாதிரியான பொது வேலைகளுக்கு ஒருசிலரின் ஆதரவுமட்டும் போதாது முஸ்லிம் சகோதரர்கள் ஆஸாதை ஆதரிக்க முன்வரவேண்டும். நாட்டுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கும் தீங்கிழைக்கும் வகையில் வகுப்புப்பிரசாரம்செய்யும் பத்திரிகைகளை ஆதரிப்பதால் நாட்டிற்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ நன்மையில்லை. அவ்விதப்பிரசாரத்தின் பலனை அனுபவித்தாய்விட்டது. மாறுதலடைந்திருக்கும் சூழ்நிலையின் தன்மையை தெரிந்துகொண்டு ஆஸாத் போன்ற பத்திரிகையின் அவசியத்தை முஸ்லிம்கள் உணரவேண்டும். முடிவில் சாத்தியமான சகல துறைகளிலும் ஆஸாதை ஆதரிக்குமாறு ஹிந்து முஸ்லிம் சகோதரர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஆஸாத்" சமீபத்தில் தன் வரவு செலவு கணக்கை வெளியிடப் போவதாகத் தெரிகிறது. அதில் முஸ்லிம் நன்கொடையாளர்களுடைய பெயர்களும் உயர்ந்த ஸ்தானத்தில் இடம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

K. M. ஷரீப்.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.